DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

<table>
<tr><td colspan="2">Case No</td><td>:</td><td colspan="3">S.C : 213/2017</td></tr>
<tr><td colspan="2">Prosecution Witness</td><td>:</td><td colspan="3">PW - 5</td></tr>
<tr><td>Name</td><td>:</td><td>திரு.ராஜா</td><td rowspan="2">Occupation</td><td rowspan="2">:</td><td rowspan="2">வாட்டர் புரூப், பெங்களூர்</td></tr>
<tr><td>Father's Name/ Husband</td><td>:</td><td>ராஜேந்திரன்</td></tr>
<tr><td>Village</td><td>:</td><td>வீரஞ்சேரி</td><td rowspan="2">Age</td><td rowspan="2">:</td><td rowspan="2">34</td></tr>
<tr><td>Taluk</td><td>:</td><td>பாபநாசம்</td></tr>
</table>

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 10th day of December 2024. 10-12-2024

(2 ஆம் எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 1 ஆம் நீதிமன்ற காவல்)

**முதல் விசாரணை**

நான் தற்போது வீராஞ்சேரி மெயின் ரோட்டில் வசிக்கிறேன் . பெங்களூரில் வாட்டர் புரூப் கம்பெனியில் வேலை பார்க்கிறேன் . நான் பொங்கலுக்கு ஊருக்கு வந்திருந்தேன். 18/01/2017 ஆம் தேதி சூலத்தில் கருப்பு சாமி கோவிலில் ஒரு பையன் குத்தப்பட்டிருந்தான். குப்புற கிடந்தான். போலிசார் அந்தயிடத்திற்கு வந்து பார்த்து என்னிடமும், தமிழரசனிடமும் கையெழுத்து வாங்கினார்கள் . என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். முதல் கையெழுத்து தமிழரசனுடையது . அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ. 2 ஆகும்.** பின்னர் சம்பவயிடத்தில், சூலம், டைல்ஸ், ரத்தம் படிந்த மண், ரத்தம் படியாத மண் ஆகியவற்றை கைப்பற்றினார்கள். அதற்காக எழுதிக்கொண்டதிலும் நானும், தமிழரசனும் சாட்சியாக கையொப்பம் போட்டோம் . என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான் .

முதல் கையெழுத்து தமிழரசனுடையது . அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ. 3 ஆகும்.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நீதிமன்றத்தில் சாட்சி கூண்டிற்கும் வரும் போது போலிஸ் கொடுத்த வாக்குமூலத்தை வைத்திருந்தேனா என்றால் வைத்திருந்தேன் . நான் கையெழுத்த போட்ட பேப்பரை போலிஸ் எழுதினார்கள். அது யார் என்று தெரியாது. நான் மொத்தம் இரண்டு கையெழுத்து போட்டேன் . கையெழுத்து போட்ட போது அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று நான் படித்து பார்க்கவில்லை . நான் கையெழுத்து போட்ட பேப்பரில் மொத்தம் எத்தனை பக்கங்கள் எழுதப்பட்டிருந்தது என்று நான் சரியாக கவனிக்கவில்லை. நான் கையெழுத்து போட்ட பேப்பரெல்லாம் கையால் தான் எழுதப்பட்டிருந்தது . அச்சடிக்கப்படவில்லை. ஒரு பக்கம் அச்சடிக்கப்பட்டு, ஒரு பக்கம் கையால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரி . நான் இந்த கையெழுத்துக்களை எழுதாத பேப்பரில் காவல் நிலையத்தில் வைத்து போட்டு கொடுத்தேன் என்றால் சரியல்ல . சம்பவயிடத்தில் வைத்து போட்டேன் . போலிஸ் கொடுத்த பேப்பரை படித்து பார்த்து தற்போது சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.